**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.31/2020 CW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | R.மாணிக்கம் | த-பெ | ராமகிருஷ்ணன் |
| ஊர்: | : | முறையூர் | சமயம்: | |
| வயது: | : | 57/25 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2025

------------------------------------------------------------------------------------------------

**11.03.2025**
**முதல் விசாரணை**

1) ஆர். மாணிக்கம் (வயது 57 ) சார்பு ஆய்வாளர், செட்டிநாடு காவல் நிலையம், இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள எதிரிகள் A1.ஆறுமுகம்(எ) ஆனந்தன், A2.பன்னீர்செல்வம், A3.பிரபு, A4.முருகேசன், A5. பில்தான்(எ)முத்து என்பவர்களுக்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 82ன் கீழ் Cr.M.P. No.01/2025 ஆக தாக்கல் செய்துள்ளேன். அதன் மீதான 06.01.2025-ம் தேதியிட்ட உத்தரவின்படி A1.ஆறுமுகம்(எ) ஆனந்தன், A3.பிரபு, A4.முருகேசன், A5.பில்தான்(எ)முத்து என்பவர்களுக்கான அறிவிப்புகளை முனையம்பட்டி பேருந்துநிலையம், ஊராட்சி மன்ற அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம் ஆகியவற்றில் ஒட்டி சார்பு செய்தேன். அதற்கான சான்றிதழ்கள் மற்றும் புகைப்படங்களை தாக்கல் செய்துள்ளேன். அதுதவிர 01.03.2025 அன்று தினத்தந்தி நாளிதழில் அறிவிப்பும் வெளியிட்டுள்ளேன்.

2) இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள 2வது எதிரி A2.பன்னீர்செல்வம், என்பவருக்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 82ன் கீழ்

Cr.M.P. No. 01/2025 ஆக தாக்கல் செய்துள்ளேன். அதன் மீதான 06.01.2025 ம் தேதியிட்ட உத்தரவின்படி A2.பன்னீர்செல்வம் என்பவருக்கான அறிவிப்புகளை கொங்கராம்பாளையம் பேரூந்துநிலையம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகம், துணை சுகாதார நிலையம் மற்றும் நியாயவிலைக் கடை ஆகியவற்றில் ஒட்டி சார்பு செய்தேன். அதற்கான சான்றிதழ்கள் மற்றும் புகைப்படங்களை தாக்கல் செய்துள்ளேன். அதுதவிர 01.03.2025 அன்று தினத்தந்தி நாளிதழில் அறிவிப்பும் வெளியிட்டுள்ளேன். மேற்படி அறிவிப்பினை வெளியிட்டதற்கான எனது அறிக்கையை தாக்கல் செய்கிறேன். இந்த அறிக்கை ExC1 ஆகும். ஆனால் இன்றுவரையில் மேற்படி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எனவே, மேற்படி எதிரிகளை அறிவிக்கப்பட்ட எதிரிகளாக விளம்புகை செய்யுமாறு வேண்டுகிறேன்.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))

**விரைவு நீதிபதி காரைக்குடி**